### மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் மீது கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்திய

# நீதிபதி மீது நடவடிக்கை எடுத்திட வேண்டும்!

## சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு தமிழ்நாடு - புதுச்சேரி பார் அசோசியேசன் கூட்டமைப்பு கடிதம்!

**சென்னை, அக்.6–**

**மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் மீது கடுமையான வார்த்தைகளை பயன்படுத்திய நீதிபதி மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தமிழ்நாடு – பாண்டிச்சேரி வழக்கறிஞர்கள் கூட்டமைப்பு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் புகார் கடிதம் வழங்கியுள்ளது.**

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களுக்கு தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி பார் அசோசியேஷன் கூட்டமைப்பு புகார் கடிதம் ஒன்றை எழுதியுள்ளது.

அந்தக் கடிதம் வருமாறு:-

ஏறத்தாழ 200 சங்கங்கள் இணைந்துள்ள வழக்கறிஞர் கூட்டமைப்பைச் சேர்ந்த நாங்கள் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான வீடியோ ஒன்றை பார்க்க நேரிட்டது.

அதில், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் மூத்த நீதிபதி ஒருவர் - மூத்த வழக்கறிஞர் மற்றும் வழக்கறிஞர்களுக்கு எதிராக சப்தமாகவும், கண்ணியக் குறைவாகவும் பேசுவதை காண முடிந்தது. மற்ற வழக்கறிஞர்கள் மீதும் வழக்கு தொடுத்தவர்கள் மீதும் அந்த நீதிபதி அடிக்கடி இவ்வாறு வார்த்தைகளை பயன்படுத்துகிறார்.

**வேண்டும் என்றே சமூக வலைதளங்களில் பரப்பப்பட்டுள்ளது!**

வீடியோ மூலம் நீதிமன்ற நடவடிக்கைகள் வெளியாவதை சென்னை உயர்நீதிமன்ற விதி அனுமதிப்பதில்லை என்ற போதும், இந்த வீடியோ பதிவு செய்யப்பட்டு சமூக வலைதளங்களில் வெளியாகி இருப்பது ஆச்சர்யமாக உள்ளது. இது வேண்டுமென்றே நடந்துள்ளது.

எனவே இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் விசாரணை நடத்த மதுரை உயர்நீதிமன்ற கிளையின் பதிவாளருக்கு உத்தரவு இட வேண்டும்.

உயர்நீதிமன்ற நீதிபதி போல் அந்த மூத்த நீதிபதியின் செயல்பாடுகள் இல்லை. என்பதோடு, நீதிமன்ற நடவடிக்கைகள் கண்ணியத்திற்கு ஏற்பவும், இல்லை ஒரு சாதாரண மானவன் அந்த வீடியோவைப் பார்த்தால், வழக்கறிஞர்களின் உன்னதமான தொழில் குறித்து என்ன நினைப்பார்கள்.

அவ்வாறு வேறு தொழிலிலும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வார்களா என்பது சந்தேகமே. வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களில் ஆஜராகும்போது தங்களின் சுயமரியாதையையும், கண்ணியத்தையும் தியாகம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பது ஏன்? நீதி பரிபாலனத்தில், நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் ஒரு தேரின் இரு சக்கரங்கள் என்பார்கள்.

சில நீதிபதிகள், வழக்கறிஞர்கள் தங்களுக்கு கீழானவர்கள் என்று எண்ணிக்கொண்டு சப்தமிடுவது, முறைகேடாகவும் நடந்து கொண்டு எங்களுக்கு உரிய மரியாதையை வழங்குவதில்லை.

**உச்சநீதிமன்ற நீதிபதி கருத்து!**

இது தொடர்பாக, உச்சநீதிமன்ற நீதிபதி பி.ஆர்.கவாய் அவர்கள் வழக்கறிஞர்களை கண்ணியத்துடன் நடத்தப்படுவது குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

அனைத்து நீதிமன்ற நீதிபதிகளும் வழக்கறிஞர்களை மரியாதையுடனும், கண்ணியத்துடனும் நடத்தப்படுவதை உறுதி செய்ய கண்காணிப்பு குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

நீதிபதிகள் அதிகார துஷ்பிரயோகம் செய்தால் அது குறித்து புகார் அளிக்க குறை தீர்ப்பு நடைமுறையை கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தற்போதெல்லாம் நேரடி ஒளிபரப்பிய - விர்ச்சுவல் - நீதிமன்ற நடவடிக்கைகள் இருந்து வரும் சூழலில், உச்சநீதிமன்றம் சிரமம் ஏதுமின்றி புகார்களை கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

**நாகரீகமான, கண்ணியமான வார்த்தைகள்!**

நீதிபதிகளுக்கும், வழக்கறிஞர்களுக்கும் இடையேயான வாதங்கள் நாகரீகமாகவும் கண்ணியமாகவும் இருக்க வேண்டும்.

எங்களின் கோரிக்கைகளை பரிசீலித்து உரிய முறையில் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு வழக்கறிஞர்கள் கூட்டமைப்பு மனுவில் குறிப்பிட்டுள்ளது.

**பேட்டி**

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் சங்க கூட்டமைப்பு தலைவர் என்.மாரப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் அவர்கள் ஒரு வழக்கிற்காக ஆஜரானபோது, அவர் தவறான கருத்தை பேசியதாகக் கூறி, மூத்த நீதிபதி அவர்கள், வழக்கறிஞரின் மனதை புண்படுத்தும்படியாக பேசியுள்ளார். ஆனால் வழக்கறிஞர் வில்சன் அவர்கள், "நான் அவ்வாறு எந்தவிதமான கருத்தும் தெரிவிக்கவில்லை. அவ்வாறு தெரிவித்திருப்பின் நான் மன்னிப்புக் கோருகிறேன்" என்று தெரிவித்துள்ளார். அதையும் நீதிபதி அவர்கள் பொருட்படுத்தாமல் நீதிமன்றத்தில் பேசக்கூடாத சில வார்த்தைகளை அவர் பயன்படுத்தியுள்ளார்.

**'பெஞ்ச் அண்டு பார்' தேரின் இரு சக்கரங்கள்**

பொதுவாக 'பெஞ்ச் அண்டு பார்' என்பது தேரினுடைய இரண்டு சக்கரங்கள் என்று உச்சநீதிமன்ற நீதியரசர்கள் எல்லாம் சொல்கின்ற நேரத்திலே, 'பெஞ்ச்' அண்டு பார்' சுமூகமாக செல்வதுதான் வழக்காடிகளுக்கான தீர்ப்புகள் நியாயமாக இருக்கும் என்பதில் யாருக்கும் எந்த மாற்றுக் கருத்தும் இருக்காது.

அப்படியிருப்பினும் பின்பு, இது தொடர்பாக நீதிபதியிடம் கேட்டபோது, அவர் தகாத வார்த்தைகளால் மூத்த வழக்கறிஞர் பி.வில்சனை மட்டுமல்லாது, அங்கே இருந்த மூத்த வழக்கறிஞர்கள், இளம் வழக்கறிஞர்கள், வழக்காடிகள் மனதையும் புண்படுத்தும் வகையில் பேசினார்.

அது மட்டுமல்லாது, எங்களுக்கெல்லாம் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், அந்த வீடியோ எவ்வாறு வலைதளங்களில் பகிரப்பட்டது. உச்சநீதிமன்ற அறிவுரைப்படி எந்த நீதிமன்ற பணிகளும் வெளியே தெரியக்கூடாது என்ற நிலை இருக்கின்றபோது, இது தமிழகம் முழுவதும் காட்டுத் தீயாக எப்படி பரவியது என்று தெரியவில்லை. அது சம்பந்தமாக நடவடிக்கை கோருகின்றோம். அது மட்டுமல்லாது, நீதிபதிகள் வழக்காடிகளுக்கு நல்ல தீர்ப்பை வழங்கி கொண்டிருக்கும் இன்றைய நிலையிலே, இனி வரும் காலங்களிலே, 'பெஞ்ச் அண்டு பார்' என்பது சுமூகமாக இருந்தால்தான் தமிழகம் ஒரு சுமூகமான நிலையை அடையும். இது வரை அப்படித்தான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எதிர்பாராத விதமாக இவ்வாறு நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் சங்க கூட்டமைப்புக்கு மிகுந்த வருத்தத்தையும், வேதனையையும் அளிக்கின்றது. ஏனென்றால் ஒரு மூத்த நீதிபதி அவர்களே, நீதிமன்றத்தில் இவ்வாறு நடந்து கொண்டிருப்பதை நினைக்கும்போது எங்களுக்கு அச்சமாக உள்ளது. ஆதலால் இனி வரும் காலங்களிலே உயர்நீதிமன்றத்திலோ, மதுரைக் கிளையிலோ, கீழமை நீதிமன்றங்களிலோ இது போல் ஒரு சம்பவம் நடைபெறக் கூடாது. அதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று கூறி எங்கள் கூட்டமைப்பு சார்பில் தமிழகத்தின் தலைமை நீதியரசர் அவர்களைச் சந்தித்து ஒரு மனுவை அளித்துள்ளோம். அந்த மனு மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதேபோல், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் ஜி.மோகன கிருஷ்ணன் தலைமையில் தலைமை நீதிபதி அவர்களைச் சந்தித்து கோரிக்கை மனுவினை அளித்தனர். அப்போது அவர், மூத்த வழக்கறிஞர்கள் கண்ணியக்குறைவாக நடத்தப்படக் கூடாது. அதேபோல மற்ற வழக்கறிஞர்களும் கண்ணியக்குறைவாக நடத்தப்படக் கூடாது. இது நீதிமன்றத்துக்கே தவறான முன்னுதாரணமாக அமைந்துள்ளது என்று கூறி மனு அளித்துள்ளோம். அந்த மனு மீது உரிய நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறோம் என்று பேட்டியின்போது குறிப்பிட்டார்.

---

### கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகள் –

# தென்னிந்தியாவின் இசைக்குயில் பி.சுசீலா - கவிஞர் மு.மேத்தாவிற்கு வழங்கியதில் மகிழ்ச்சி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, அக். 6–

கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகளை 'தென்னிந்தியாவின் இசைக்குயில்' திருமதி. பி.சுசீலா அவர்களுக்கும், கவிஞர் மு.மேத்தா அவர்களுக்கும் வழங்கியது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

**தனது திரைவசனங்கள் மூலமாகத் தமிழ்ச் சமூகத்துடன் உரையாடல் நிகழ்த்தி மாற்றங்களுக்கு வித்திட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர்! அவரது பெயரில் 'கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகள்' வழங்கப்படுகின்றன.**

**தன் மயக்கும் குரலால் பல லட்சம் இரசிகர்களின் மனங்களில் குடியேறிவிட்ட 'தென்னிந்தியாவின் இசைக்குயில்' பி.சுசீலா அவர்களுக்கும் – வளமான எழுத்துகளால் கோக்கப்பட்ட வைரமாலையெனக் கவிதைகள் படைத்திட்ட கவிஞர் மு.மேத்தா அவர்களுக்கும் 2023–ஆம் ஆண்டுக்கான விருதினை வழங்கி நிரம்ப மகிழ்ச்சியும் பெருமையும் கொண்டேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமை! காரைக்குடியில்

# கலைஞர் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் முப்பெரும் விழா!

### அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் சிறப்புரை!

சிவகங்கை, அக். 6-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கலைஞர் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கவியரசர் கண்ணதாசன் மணி மண்டபத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா, கழகப் பவள விழா, தந்தை பெரியார் பிறந்த நாள் விழா ஆகிய முப்பெரும் விழா முன்னாள் அமைச்சரும் கலைஞர் தமிழ்ச் சங்க நிறுவனருமான மு.தென்னவன் தலைமையில் நடைபெற்றது.

கலைஞர் தமிழ்ச்சங்க செயலாளர் பொறியாளர் செந்தில் குமார் வரவேற்புரை ஆற்றினார். பல்சுவை நிகழ்ச்சிகளை காரைக்குடி மாநகர மேயர் செயற்குழு உறுப்பினர் எஸ்.முத்து துரை, புரவலர் பழ.படிக்காசு ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. துரைராஜ், மாவட்ட துணை செயலாளர் த.சேங்கை மாறன், மாநகர துணை மேயரும் மாநகர செயலாளருமான என்.குணசேகரன், வழக்கறிஞர் மதிவதனி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முப்பெரும் விழா குறித்து கூட்டுறவுத் துறை அமைச்சரும் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளருமான கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் திரைப்பட பின்னணி பாடகர் அபி குழுவினர் இன்னிசை நிகழ்ச்சியும் புதுகை பூபாலம் கலைக் குழுவினரின் நையாண்டி பாட்டு தர்பார் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி, ஒன்றிய செயலாளர்கள் கே. ஆர். ஆனந்த் சுப.சின்னதுரை, இலக்கிய அணி துணை அமைப்பாளர் காரை சுரேஷ், மாநகராட்சி உறுப்பினர் சோ கண்ணன், மாவட்டப் பிரதிநிதி சேவியர் உட்பட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் நன்றி கூறினார்.



தேனி தெற்கு மாவட்டம் கோம்பை பேரூராட்சி 14வது வார்டு தேவாங்க சமூகத்துக்கு பாத்தியப்பட்ட மயானத்திற்கு நிழற்குடை ஆழ்துளை கிணறு பத்து லட்சத்திற்கு தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் பேரூர் கழகச் செயலாளர் முருகன், பேரூராட்சி தலைவர் மோகன்ராஜ் மற்றும் கழக மூத்த முன்னோடிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

வாட்டரை வழங்க முடியாத சூழலில், டேங்கர் லாரி மூலம் தாமதமின்றி குடிநீர் வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும்.

**மின் இணைப்புகள்!**

குடியிருப்புகளை மழை நீர் சூழ்ந்திருக்கும்போது நம்மால் மின் இணைப்பு வழங்க முடியாது. அதனால் தாழ்வான பகுதிகளில் உள்ள EB BOXகளை இப்போதே உயர்த்தி வைப்பதற்கான நடைமுறையை மேற்கொள்ள வேண்டும். மழை நீர் சூழ்ந்துள்ள ஒட்டுமொத்தப் பகுதியும் இருளில் மூழ்கிவிடும்போது, 'வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்காவிட்டாலும் ஜெனரேட்டர் மூலம் பிரதான சாலைகளிலும் இணைப்புச் சாலைகளிலும் ஃபோகஸ் லைட்களை கட்டி எரிய விடுங்கள்' என்று கடந்த மழையின்போது மக்கள் கோரிக்கை வைத்தனர். அதையும் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மழை, வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர்களின்போது மக்களிடம் பணியாற்றுவதில் நீண்ட நெடிய அனுபவம் உள்ளவர்களையும், மக்களுக்காக பணியாற்ற வேண்டும் என்று தானாக முன்வந்து பணியாற்றும் தன்னார்வலர்களையும் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வார்டுகளிலும் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர்கள், தன்னார்வலர்களைக் கொண்ட வாட்ஸ்அப் குழுக்களை நாம் உருவாக்கலாம். மீட்புப் பணி, உணவுப் பொருட்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது போன்ற பணிகளில் அவர்களை பயன்படுத்திக்கொள்ளலாம்.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிகளிலும் சட்டமன்ற உறுப்பினர்களின் தலைமையில் இயங்கும்படி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்களை அறிவுறுத்த வேண்டும். சிதிலடைந்த நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள், பழமையான சுனாமி குடியிருப்புகள் போன்ற இடங்களில் வாழும் மக்களை எச்சரிக்கை விடுத்து அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்க வேண்டும்.

**கட்டுப்பாட்டு அறையில் தினந்தோறும் ஆய்வு செய்வேன்!**

மழை நீர் தேங்கும் பகுதிகள், ரிலீஃப் சென்டர்கள், மோட்டார்கள், போட் உள்பட நம்மிடம் கையிருப்பில் உள்ள உபகரணங்கள், சமையற் கூடங்கள், தன்னார்வலர்கள் குறித்த விவரங்கள்... என ஒட்டுமொத்தத் தகவல்களையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் வகையில் நம்முடைய சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறையான Integrated Command and Control Centre - ICCCஐ மேலும் பலப்படுத்துவது அவசியம். சமூக வலைத்தளங்களில் வரும் மக்களின் கோரிக்கைகள், புகார்கள், அதே போல மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகள், அவற்றுக்கான தீர்வுகள்... என அனைத்தும் ICCC மூலம் ஒருங்கிணைக்கும் வகையில் இந்த கட்டுப்பாட்டு அறை இருக்க வேண்டும்.

மழை நேரத்தில் நான் தினமும் அந்தக் கட்டுப்பாட்டு அறைக்கு வந்து அன்றன்று நடந்தப் பணிகளை ஆய்வு செய்து மறுநாள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் அறிவுறுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மக்கள் பிரதிநிதிகளும் அரசு அலுவலர்களும் அதிகாரிகளும் நம்முடன் களத்தில் இருக்கிறார்கள்' என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டால், 'அரசாங்கம் நம்முடன் நிற்கிறது. இந்த மழையை சமாளித்துவிடலாம்' என்ற நிம்மதி மக்களுக்கு ஏற்படும். அந்தவகையில் நாம் ஒவ்வொருவரும் நம் பணிகளை அமைத்துக்கொள்வோம் என கேட்டுக் கொள்கிறேன்.

மழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நம் சக அமைச்சர் பெருமக்களுடன் சேர்ந்து மூன்று ஆய்வுக் கூட்டங்களை நடத்தியுள்ளோம். அந்த ஆய்வுக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகள், அந்தப் பணிகளின் தற்போதைய நிலை குறித்து இங்கே நாம் விவாதிக்க உள்ளோம்.

நாம் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி இந்த மழையில் இருந்து மக்களை காப்பாற்ற உறுதியேற்போம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அரசு துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், மண்டல கண்காணிப்பு அலுவலர்கள், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சுதர்சனம், ஆர்.டி.சேகர், தாயகம் கவி, எம்.கே.மோகன், எஸ். அரவிந்த்ரமேஷ், த. வேலு, ஜோசப் சாமுவேல், கா.கணபதி, ஜெ.கருணாநிதி, கே.பி.சங்கர், மருத்துவர் நா.எழிலன், இ.பரந்தாமன், ஆ.வெற்றியழகன், ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, ஜே.எம்.எச். ஹசன் மௌலானா, துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

